தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, ஆனி 27, திருவள்ளுவர் ஆண்டு 2050

2019 ஜூலை 12, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.”

சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகில் மக்கள் பல தொழில்களைச் செய்தாலும் அவையனைத்தும் உழவுத் தொழிலையே நம்பி உள்ளன. எனவே, முதன்மையான தொழிலாக விளங்குவது உழவுத் தொழிலே.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

91—

வீடுகள் கட்டுதல்

***37592—திரு. கி. மாணிக்கம்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களில் தாங்கள் வாழும் இடத்திற்கு/மனைக்கு நில உரிமம் பெற்றவர்களுக்கு அவர்களது வீடுகளைத் தாங்களாகவே கட்டிக்கொள்ள ரூபாய் 2.10 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. இத்தொகையினைக் கொண்டு பயனாளிகள் தங்களது வீடுகளை அவர்களே கட்டிக்கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் வாடிப்பட்டி மற்றும் அலங்காநல்லூர் பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் விடுவிக்கப்பட்ட நிதியினைக் கொண்டு, பேரூராட்சி இயக்குநரகத்தால் பயனாளிகளுக்கு 300 சதுர அடி கட்டட பரப்பளவிற்குக் குறையாமல் வீடுகள் கட்டிக்கொள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.2.10 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. மாணிக்கம், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***40543—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஊராட்சி ஒன்றியம், வீரணாமூர் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?